செ.வெ.எண்: 39 / மார்ச் நாள்: 23.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-இல் 100 சதவீத வாக்குப்பதிவு எய்திட மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-இல் 100 சதவீதம் வாக்குப்பதிவு எய்திட இலக்காக கொண்டு மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின்படி பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி 100 சதவீத வாக்குப்பதிவு எய்திட இலக்காக கொண்டு மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின்படி அரசுத் துறைகளின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் மின்னணு திரை கொண்ட விளம்பர வீடியோ வாகனத்தின் மூலம் இன்று (23.03.2016) பங்குனி உத்திரம் திருவிழா நாளை முன்னிட்டு பொதுமக்கள் அதிகளவில் பார்த்திட ஏதுவாக இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே வாக்காளர் விழிப்புணர்வு குறித்த படக்காட்சி திரையிடப்பட்டது. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி அவர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ம.கயிலைச்செல்வம் அவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து இப்படக்காட்சியினை ஏற்பாடு செய்து பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

அதேபோல மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தின் சார்பாக இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் அவர்கள் வட்டாட்சியர் அலுவலக பகுதிகளில் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**